புதுச்சேரி அரசு - போக்குவரத்துத் துறை

எண்: 04/TD/DTC/PA/2014/29

புதுச்சேரி, தேதி: 23.07.2014

செய்திக் குறிப்பு

# புதுவையின் போக்குவரத்துத் திட்ட ஆய்வுப்பணி தொடக்கம்

புதுவை யூனியன் பிரதேசமானது நம் நாட்டின் ஐந்தாவது நகரமயமான பகுதியாகும். மாநில வாகனப் பதிவேட்டின்படி இங்கு 8.2 லட்சம் வாகனங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன. புதுவையில் கட்டமைப்பால் கவரப்படும் மக்கள் பலரின் குடியேற்றத்தால் இங்கே வாகன மற்றும் போக்குவரத்து நெரிசல் அதிகமாகியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 60000 வாகனங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

புதுவை மக்களின் அன்றாட பயண தூரம் சராசரியாக 6.5 கி.மீ. என்பதால், சொந்த வாகன உபயோகத்தையே மக்கள் பெரும்பாலும் சார்ந்துள்ளனர். சாலையில் வாகனங்களின் வேகம் அதிகமாக இல்லாத போதிலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுக்கு சுமார் 1500 விபத்துகளும், அவற்றின்மூலம் ஆண்டுக்கு சுமார் 200 இறப்புகள் மற்றும் பொருள் இழப்புகளும் சாலைப் போக்குவரத்தால் ஏற்படுகிறது. பொது மக்கள் விருப்பத்துடன் பயன்படுத்தும் வகையில் புதுச்சேரியின் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தைத் திட்டமிட்டு மேம்படுத்தி பாதுகாப்புமிக்க, எளிமையான பயணத்தை உறுதி செய்யும் முகமாக புதுவை அரசானது புதுவைக்கான எதிர்கால போக்குவரத்துத் திட்டத்திற்காக மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சக நெறிகளின்படி ஆய்வுப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

புதுவை அரசின் ஆணைப்படி, டெல்லி ஒருங்கிணைந்த பல்நோக்கு போக்குவரத்து மாதிரித்திட்ட அமைப்பு (Delhi Integrated Multi-Modal Transit System Ltd. (DIMTS) என்னும் தேசிய தலைநகர் டெல்லி அரசின் நிறுவனமானது, புதுவைக்கான முழுமையான போக்குவரத்து திட்ட ஆய்வுப்பணியினை மேள்கொள்ள உள்ளது.

முழுமையான போக்குவரத்து திட்ட ஆய்வுப்பணியானது சமூகம், பொருளாதாரம் போன்ற பாகுபாடின்றி, மிதிவண்டியில் செல்வோர் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுடன் கூடிய முழுமையான வளர்ச்சியினை உறுதி செய்யும் வகையில் அமையும்.

முழுமையான போக்குவரத்துத் திட்டம் தயார் செய்ய மேற்கொள்ளப்படும் ஆய்வுப்பணியானது பல்வேறு கள ஆய்வுகளை உள்ளடக்கியது. வீடுகள், பயணிகள், வாகனங்கள். வாகன நிறுத்துமிடங்கள் உட்பட பல்வேறு ஆய்வுப்பணிகள் நடைபெறும். தங்களை நாடி வரும் களப்பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து விபரங்களையும் தெரிவித்து புதுவைக்கான முழுமையான போக்குவரத்துத் திட்ட ஆய்வுப்பணியினை மேற்கொள்ள பொது மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்